## August 23, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ரஷியாவில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு எண்ணெய் விநியோகிக்கப் பயன்படுத்தப்படும் ட்ரூஷ்பா குழாய் தடத்தின் மீது உக்ரைன் தாக்குதல் நடத்தியுள்ளது. அதையடுத்து, ரஷியா எண்ணெயை இன்னமும் வாங்கிவரும் ஹங்கேரி, ஸ்லோவாகியா ஆகிய ஐரோப்பிய யூனியன் உறுப்பு நாடுகளுக்கான எண்ணெய் விநியோகம் முடங்கியுள்ளது.
    i. 2022 பிப்ரவரியில் ரஷியாவின் படையெடுப்புக்குப் பிறகு, மற்ற 25 ஐரோப்பிய யூனியன் உறுப்பு நாடுகள் ரஷியாவிடமிருந்து எண்ணெய் வாங்குவதை நிறுத்தின. ஆனால் ஹங்கேரியும் ஸ்லோவாகியாவும் இதற்கு விதிவிலக்காக உள்ளன. 2027-ஆம் ஆண்டுக்குள் ரஷியாவிடம் இருந்து எண்ணெய் மற்றும் எரிவாயு வாங்குவதை முற்றிலும் நிறுத்த ஐரோப்பிய யூனியன் திட்டமிட்டுள்ளது. ஆனால் அதற்கு இந்த நாடுகள் எதிர்ப்பு தெரிவித்துவருகின்றன.
    ii. தங்கள் பொருளாதாரத்தில் ரஷிய எரிசக்தி முக்கிய பங்குவகிப்பதால் ஹங்கேரியும் ஸ்லோவாகியாவும் இந்த நிலைப்பாட்டை எடுத்துள்ளன. இந்தச் சூழலில் அந்த இரு நாடுகளுக்கும் எண்ணெய் விநியோகிக்கப்படும் குழாய் கட்டமைப்பின் மீது உக்ரைன் தாக்குதல் நடத்தியுள்ளது பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.
2. காஸா பகுதியில் மிகப்பெரிய நகரான காஸா சிட்டியில் பஞ்ச நிலை ஏற்பட்டுள்ளதாக ஐ.நா. நிபுணர் குழுவான ஒருங்கிணைந்த உணவுப் பாதுகாப்பு நிலவர வகைப்படுத்தல் (ஐபிசி) அமைப்பு அறிவித்துள்ளது.
    i. 2004-இல் ஐபிசி தொடங்கப்பட்டதிலிருந்து, நான்கு பஞ்சங்கள் மட்டுமே அறிவிக்கப்பட்டுள்ளன. கடைசியாக, அந்த அமைப்பு சூடானில் கடந்த ஆண்டு பஞ்ச நிலை அறிவித்தது.
    ii. தற்போது காஸா சிட்டி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் 5 லட்சம் முதல் 8 லட்சம் வரையிலானவர்கள் வசிக்கும் பகுதிகளில் பஞ்சம் உறுதி செய்யப்பட்டுள்ளது.
    iii. இதுதவிர, டேய்ர் அல்-பாலா, கான் யூனிஸ் நகரங்களில் விரைவில் பஞ்சம் ஏற்பட வாய்ப்புள்ளதாக ஐபிசி அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.
3. தனது பதவிக் காலத்தில் அரசுப் பணத்தை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் இலங்கை முன்னாள் அதிபர் ரணில் விக்ரமசிங்கவை (76) போலீஸார் கைது செய்தனர்.
4. டுரண்ட் கோப்பை கால்பந்து போட்டியில் சாம்பியன் அணிக்கு ரூ.1.21 கோடி பரிசுத் தொகை வழங்கப் படஉள்ளது. ரன்னர் அணிக்கு ரூ.60 லட்சம் வழங்கப்படும். கடந்த ஆண்டைக் காட்டிலும் 250 சதவீதம் பரிசுத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.
    i. நாட்டின் பழைமையான கால்பந்து போட்டிகளில் ஒன்றான டுரண்ட் கோப்பை 134-ஆவது ஆண்டு போட்டி நடைபெற்று வருகிறது.

5. மேக்கேதாட்டு அணை திட்டத்தை எதிர்ப்பதன் மூலம் விவசாயிகளுக்கு தமிழகம் அநீதி இழைக்கிறது என்று கர்நாடக முதல்வர் சித்தராமையா தெரிவித்தார்.
   i. சீரான மழை ஆண்டில் காவிரியில் தமிழகத்துக்கு 177.25 டி.எம்.சி. தண்ணீரை மட்டுமே திறந்துவிட வேண்டும். ஆனால், ஒதுக்கப்பட்ட அளவைக் காட்டிலும் கூடுதல் நீரை (உபரிநீர்) திறந்துவிட்டுள்ளோம். அதன் காரணமாகவே மேக்கேதாட்டு சமன்பாட்டு அணையை கட்ட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். நடப்பு ஆண்டைப்போல உபரிநீரை திறந்துவிட வேண்டிய சூழ்நிலை எழுவதால், மேக்கேதாட்டு அணை திட்டம் கர்நாடகத்துக்கு அவசியம் தேவை. இந்த திட்டத்தை தமிழகம் ஏன் எதிர்க்கிறது என்பது தெரியவில்லை.
   ii. காவிரி மூலம் தமிழகத்துக்கு கிடைக்க வேண்டிய நீரின் அளவு 177.25 டி.எம்.சி. ஆகும். உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் இதைத்தான் கூறியுள்ளது. மேக்கேதாட்டு அணையை கட்டினால், அதில் 67 டி.எம்.சி. நீரைச் சேமிக்க முடியும். இது, குடிநீர் தேவையை நிறைவுசெய்யவும், வறட்சிக் காலத்தின்போது (தமிழகத்துக்கு) திறந்துவிடவும் உதவியாக இருக்கும்.
   iii. மேக்கேதாட்டு அணையைக் கட்டினால், எந்த பாதிப்பும் ஏற்படாது. எனவே, மேக்கேதாட்டு அணை திட்டத்தை எதிர்க்கவேண்டாம் என்று தமிழக அரசை கேட்டுக்கொள்கிறேன்.
   iv. நிகழாண்டில் அதிகமழை பெய்துள்ளதால், அணைகள் அனைத்தும் நிரம்பியுள்ளன. காவிரி, துங்கபத்ரா, கிருஷ்ணா ஆறுகளில் இருந்து உபரிநீர் திறந்துவிடப்படுகிறது. மேக்கேதாட்டு அணை திட்டத்தை எப்போதும் தமிழகம் எதிர்த்து வந்துள்ளது. இதன் மூலம், விவசாயிகளுக்கு தமிழக அரசு அநீதி இழைத்து வருகிறது என்றார்.
6. தேசிய விண்வெளி தினத்தை முன்னிட்டு தில்லி பாரத மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காட்சிப்படுத்தப்பட்ட விண்வெளியில் இந்தியா சார்பில் அமைக்கப்படவிருக்கும் விண்வெளி நிலையத்தின் மாதிரி.
   i. 'பாரதிய விண்வெளி நிலையம்' என்ற பெயருடன் கூடிய இந்த விண்வெளி நிலையத்தின் ஒரு பகுதியை வரும் 2028-ஆம் ஆண்டு விண்ணில் செலுத்த இந்தியா திட்டமிட்டுள்ளது. 52,000 கிலோ எடையுடன் கூடிய முழுமையான விண்வெளி நிலையத்தை வரும் 2035-ஆம் ஆண்டுக்குள் நிறுவ இந்திய திட்டமிட்டுள்ளது.
   ii. முதல் முறையாக சோவியத் யூனியன் (ரஷியா) சார்பில் கடந்த 1982-இல் 'சல்யூட்-7' விண்வெளி நிலையம் விண்ணில் அமைக்கப்பட்டது. 1991-ஆம் ஆண்டு வரை செயல்பாட்டில் இருந்தது.
   iii. இரண்டாவதாக அமெரிக்கா, ரஷியா, ஐரோப்பா, ஜப்பான், கனடா நாடுகள் இணைந்து கடந்த 1998-இல் சர்வதேச விண்வெளி நிலையத்தை

அமைத்தன. இது வரும் 2030-ஆம் ஆண்டு வரை செயல்பாட்டில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

iv. மூன்றாவதாக சீனா சார்பில் கடந்த 2021-இல் 'திலாங்காங்' விண்வெளிநிலையம் விண்ணில் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

7. பிரபல வெளிநாடுவாழ் இந்தியத் தொழிலதிபர் லார்டு ஸ்வராஜ்பால் (94) காலமானார்.
   i. ஸ்வராஜ் பால் - பிரிட்டனில் செயல்படும் கபாரோ குழுமத்தின் நிறுவனர்.

8. சீனாவில் நடை பெறும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (எஸ்சிஓ) மாநாட்டில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி, ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் உள்பட 20 உலகத் தலைவர்கள் பங் கேற்பதாக சீனா அறிவித்தது.
   i. சீனாவின் தியான்ஜின் நகரில் ஆகஸ்ட் 31, செப்டம்பர் 1 ஆகிய தேதிகளில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் வருடாந்திர உச்சி மாநாடு நடைபெறவுள்ளது.
   ii. இந்தியாவுக்கு எதிராக அமெரிக்கா தீவிரமான வரி விதிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட நிலையில் இந்தியாவுடன் சீனா நெருக்கம் காட்டி வருகிறது.
   iii. ரஷியா, இந்தியா, ஈரான், சீனா, பாகிஸ்தான், கஜகஸ்தான், கிர் கிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெ கிஸ்தான், பெலாரஸ் ஆகிய 10 நாடுகள் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் உறுப்பினர்களாக உள்ளன. சுழற்சி முறையில் இந்த ஆண்டு அமைப்பின் தலைவராக சீனா உள்ளது.

9. சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) கவுன்சில் கூட்டம் மத்திய நிதி யமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் தில்லியில் செப்டம்பர் 3,4 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது.
   i. இதில், தற்போதுள்ள 5%, 12%, 18%, 28% என்ற நான்கு விகித ஜிஎஸ்டி விதிப்பு முறையை 5%, 18% என இரண்டு விகித முறையாக குறைக்கும் பரிந்துரை குறித்து விவாதிக்கப் பட்டு முடிவெடுக்கப்பட உள்ளது.

10. **செய்திகளில் இடம்பெற்ற சில முக்கிய நபர்கள் :-**
   i. ஹங்கேரி பிரதமர் - விக்டர் ஓர்பன்
   ii. இளவேனில் வளரிவன் - இந்திய துப்பாக்கி சுடும் வீரர் (10 மீ ஏர் ரைபிள்)